# தமிழ்நாடு தகவல் ஆணையம்

பிளாக் எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட், நந்தனம், சென்னை-600 035. தொலைபேசி எண்.044-2951 5590


**ஆணை நாள். 01.09.2026**

**முன்னிலை**

**திரு அபய் குமார் சிங், இகாப (ஓய்வு)**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA 4268/F/2024**

Thiru.S.Karthick, -- மேல்முறையீட்டாளர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர் /
வட்ட துணை ஆய்வாளர்,
நில அளவை பிரிவு, -- பொது அதிகார அமைப்பு
வட்டாட்சியர் அலுவலகம்,
கிருஷ்ணகிரி மாவட்டம்-635 115.

******

**இறுதிஆணை**

இவ்வாணையம் 27.05.2026 அன்று பிறப்பித்த உத்தரவினை தொடர்ந்து பொது அதிகார அமைப்பின் சார்பாக பொதுத் தகவல் அலுவலர் திருமதி.அ.சங்கீதா, வட்ட துணை ஆய்வாளர், வட்டாட்சியர் அலுவலகம், கிருஷ்ணகிரி மாவட்டம், ஆகியோர்கள் 01.07.2026 அன்று ஆணையத்தின் முன் நேரில் ஆஜராகி, மனுதாரருக்கு தகவல்கள் கடித எண்.மூ.மு.1975/2023/எப்1, நாள் 05.06.2026 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக மனுதாரருக்கு இனம் வாரியாக தகவல்கள் ஒப்புகை அட்டையுடன்கூடிய பதிவஞ்சலில் அனுப்பப்பட்டுள்ளதாகத் தெரிவித்து அதன் நகல், அப்போதைய பொதுத் தகவல் அலுவலரின் எழுத்துமூல விளக்கம், மற்றும் அப்போதைய மேல்முறையீட்டு அலுவலரின் எழுத்துமூல விளக்கம் ஆகியவற்றினை இணைத்து ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார். இதனை ஆணையம் பரிசீலனை செய்கையில், அப்போதைய மேல்முறையீட்டு அலுவலரால் சமர்ப்பிக்கப்பட்ட எழுத்துமூல விளக்கத்தினை ஆணையம் பரிசீலனை செய்து ஏற்கிறது. மேலும், அப்போதைய பொதுத் தகவல் அலுவலரின் எழுத்துமூல விளக்கத்தினை ஆணையம் பரிசீலனை

செய்கையில் அப்போதைய பொதுத் தகவல் அலுவலரின் எழுத்துமூல விளக்கம் ஏற்புடையதல்ல என்பதை ஆணையம் பதிவு செய்து ஆணையம் கீழ்க்கண்ட உத்தரவினைப் பிறப்பித்தது.

1. **இன்றைய விசாரணையில் பொதுத் தகவல் அலுவலர், சமர்ப்பித்த அப்போதைய பொதுத் தகவல் அலுவலரின் எழுத்துமூல விளக்கம் ஏற்புடையதல்ல என்பதை ஆணையம்பதிவு செய்கிறது. மேலும் அப்போதைய பொதுத் தகவல் அலுவலர் தனது எழுத்துமூல விளக்கத்தில் குறிப்பிட்டுள்ளவாறு அதற்குண்டான முழு விவரங்களுடன்** 06.07.2026 **அன்று ஆணையத்தின் முன் நேரில் ஆஜராகி, விளக்கத்தினை சமர்ப்பிக்குமாறு அப்போதைய பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையத்தால் அறிவுறுத்தப்பட்டிருந்தது.**

மேற்குறிப்பிடப்பட்ட ஆணையத்தின் அறிவுறுத்தலுக்கிணங்க, பொது அதிகார அமைப்பின் சார்பாக பொதுத் தகவல் அலுவலர் திருமதி.அ.சங்கீதா, வட்ட துணை ஆய்வாளர், வட்டாட்சியர் அலுவலகம், கிருஷ்ணகிரி மாவட்டம் மற்றும் அப்போதைய பொதுத் தகவல் அலுவலர் திரு.பா.பிரகாஷ், தலைமையிடத்துத் துணை வட்டாட்சியர், கிருஷ்ணகிரி வட்டம் மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டம் ஆகியோர்கள் 06.07.2026 அன்று ஆணையத்தின் முன் நேரில் ஆஜராகி, ஆணையத்தின் உத்தரவிற்கிணங்க, அப்போதைய பொதுத் தகவல் அலுவலர் தனது எழுத்துமூல விளக்கத்தில் கிருஷ்ணகிரி வட்டாட்சியர், அலுவலகத்தில் பொதுப்பிரிவு, சமூக பாதுகாப்பு திட்ட பிரிவு, வட்ட வழங்கல் அலுவலக பிரிவு, நில அளவை பிரிவு ஆகியவை ஒரே கட்டிடத்தில் செயல்பட்டு வருவதாகவும், கிருஷ்ணகிரி வட்டாட்சியர் அலுவலகத்திற்கு வரும் மனுக்கள் அந்தந்த பிரிவுகளுக்கு ஒதுக்கீடு செய்யப்படுவதாகவும், மனுதாரர் தகவல் வழங்க கோரி மனு 2023-ல் F1 இருக்கைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும், இந்த இருக்கை பொதுத் தகவல் அலுவலர்/ வட்ட துணை ஆய்வாளர் நில அளவை பிரிவு, கிருஷ்ணகிரி பொது அதிகார அமைப்பை சார்ந்தது என்றும், பொது பிரிவிற்கு ஒதுக்கீடு செய்யப்படும் தகவல் வழங்க கோரி வரும் கடிதத்திற்கு பொதுத் தகவல் அலுவலர் மற்றும் தலைமையிடத்துத் துணை வட்டாட்சியர், கிருஷ்ணகிரி அவர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு தகவல் வழங்கப்பட்டு வருவதாகவும், மனுதாரர் தகவல் வழங்கக் கோரிய மனு பொதுத் தகவல் அலுவலர்/ வட்ட துணை ஆய்வாளர் நில அளவை பிரிவு, கிருஷ்ணகிரி பொது அதிகார அமைப்பை சார்ந்தது என்றும், கிருஷ்ணகிரி வட்ட துணை ஆய்வாளர், திரு.பெரியசாமி என்பவர் பணியில் இருந்தார் என்றும் தெரிவித்து தனது எழுத்துமூல விளக்கத்தினை ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார். இதனை ஆணையம் பரிசீலனை செய்து, கீழ்க்கண்ட உத்தரவினை பிறப்பித்தது.

2. **இன்றைய விசாரணையில் அப்போதைய பொதுத் தகவல் அலுவலரால் சமர்ப்பிக்கப்பட்ட விளக்கத்தினை ஆணையம் ஏற்கிறது. மேலும், மனுதாரரின் தகவல் அறியும் உரிமைச் சட்ட மனுவிற்கு உரிய காலத்திற்குள் தகவல்களை வழங்காத அப்போதைய பொதுத் தகவல் அலுவலர் திரு.பெரியசாமி, வட்டதுணை ஆய்வாளர், கிருஷ்ணகிரி வட்டம்** (ம) **மாவட்டம் அவர்கள் மீது ஏன் தகவல் பெறும் உரிமைச் சட்டம்,** 2005, **பிரிவு** 20 (1) **மற்றும்** 20(2)**-ன் கீழ் நடவடிக்கை எடுக்கக்கூடாது என்பதற்கான**

**எழுத்துமூல விளக்கத்தினை இவ்வாணையத்திற்கு 01.09.2026 அன்று நேரில் ஆஜராகி சமர்ப்பிக்குமாறு அப்போதைய பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையத்தால் உத்தரவிடப்படுகிறது. அன்றைய தினம் தற்போதைய பொதுத் தகவல் அலுவலரும் ஆணையத்தின் முன் நேரில் ஆஜராகுமாறு ஆணையத்தால் உத்தரவிடப்பட்டிருந்தது.**

மேற்குறிப்பிடப்பட்ட ஆணையத்தின் உத்தரவிற்கிணங்க, பொது அதிகார அமைப்பின் சார்பாக அப்போதைய பொதுத் தகவல் அலுவலர் திரு.அ.பெரியசாமி, வட்டதுணை ஆய்வாளர், வட்டாட்சியர் அலுவலகம், பர்கூர், கிருஷ்ணகிரி மாவட்டம் அவர்கள் 01.09.2026 அன்று நேரில் ஆஜராகி, ஆணையத்தின் உத்தரவிற்கிணங்க, தனது எழுத்துமூல விளக்கத்தினை ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார். இதனை ஆணையம் பரிசீலனை செய்து ஏற்று, இந்த இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் மீதான விசாரணை இத்துடன் முற்றாக்கம் செய்து உத்தரவிடப்படுகிறது.

**ஒம்/-(அபய் குமார் சிங்)**
**மாநில தகவல் ஆணையர்**

**(ஆணையத்தின் ஆணைப்படி)**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 4268/F/2024</u>**
**பெறுநர்**
**<u>பொது அதிகார அமைப்பு</u>**

பொதுத் தகவல் அலுவலர் /
வட்ட துணை ஆய்வாளர்,
நில அளவை பிரிவு,
வட்டாட்சியர் அலுவலகம்,
கிருஷ்ணகிரி மாவட்டம்-635 115.

**அப்போதைய பொதுத் தகவல் அலுவலர்**
**திரு.பெரியசாமி,**
**வட்டதுணை ஆய்வாளர்,**
**கிருஷ்ணகிரி வட்டம் (ம) மாவட்டம்.**

**(தற்போதைய பொதுத் தகவல் அலுவலர் வாயிலாக)**

**அப்போதைய பொதுத் தகவல் அலுவலர்.**
**திரு.பா.பிரகாஷ்,**
**தலைமையிடத்துத் துணை வட்டாட்சியர்,**
**வட்டாட்சியர் அலுவலகம்,**
**கிருஷ்ணகிரி மாவட்டம்.**

**(தற்போதைய பொதுத் தகவல் அலுவலர் வாயிலாக)**

**அப்போதைய முதல் மேல்முறையீட்டு அலுவலர் (05.02.2024 தேதிய),**
**வட்டாட்சியர்,**
**வட்டாட்சியர் அலுவலகம்,**
**கிருஷ்ணகிரி மாவட்டம்.**

**(தற்போதைய பொதுத் தகவல் அலுவலர் வாயிலாக)**

**<u>மனுதாரர்</u>**

திரு.எஸ்.கார்த்திக்,
புதுவார்டு 12,
வெஸ்ட்கார்ட் தெரு,
தாரமங்கலம், ஓமலூர் வட்டம்,
சேலம் மாவட்டம்-635 104.

**<u>நகல்</u>**

மாவட்ட ஆட்சித் தலைவர்,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
கிருஷ்ணகிரி மாவட்டம்.

பதிவாளர்,
தமிழ்நாடு தகவல் ஆணையம்,
**சென்னை**-35.(For Followup).

Copy to: File NS/PA-